[2004 ஜூலை 29

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைக்கிணங்க பச்சைமலைப் பகுதியை வளப்படுத்த 2001–2002 நிதி ஆண்டிலிருந்து 2003–2004 நிதி ஆண்டு வரை நந்தியாபுரம், கோம்பைபுதூர், நாகைநல்லூர் முதலிய கிராமங்களில் ரூ.44.69 இலட்சம் செலவில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இது தவிர, பச்சைமலைப் பகுதியினை வளப்படுத்தவும், அப்பகுதி மக்களின் வசதிகளை மேம்படுத்தவும், முதற்கட்டமாக 11–12–2002–ல் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் திருச்சி மண்டலம், உப்பிலியாபுரம் தொகுதியில் உள்ள பச்சைமலைப் பகுதியில் சோபனாபுரம் முதல் டாப் செங்காடு வரை சாலை பராமரிப்புப் பணி மேற்கொள்ளப்படும் என அறிவித்ததையடுத்து, 2002–2003 ஆம் ஆண்டில் வனத் துறை மூலம் ரூ.10 இலட்சமும் மாவட்ட ஆட்சியர் நிதியிலிருந்து ரூ.10 இலட்சமும் ஒதுக்கப்பட்டு, மேற்கண்ட சாலைப் பணிகள் பராமரிக்கப்பட்டு வந்துள்ளன. மேலும் 16 கிலோ மீட்டர் தூரத்திற்கு 2004–2005 ஆம் ஆண்டில் சாலைப் பணிகள் மேற்கொள்ள ரூ.50 இலட்சத்திற்கு 28–6–2004–ல் வனத் துறையால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் அம்மா அவர்களின் ஆணையின் பேரில் பச்சைமலைப் பகுதியில் உள்ள மக்கள் பயன்பெறும் வகையில் காப்புக் காடு வழியாக மின்சாரம் எடுத்துச் செல்லப்பட்டு அங்குள்ள மக்களுக்கு மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறுகிய கால வினா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா எண் 1, திரு. பி.கே. சேகர்பாபு. மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

1—

பாலங்கள் கட்டுதல்

***60768—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2004 ஜூலை 29]

(அ) சென்னையில் இவ்வாண்டில் (2004–2005) இருப்புப் பாதை கடவுகளில் மேம்பாலம் அல்லது தரைப்பாலம் அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை மேம்பாலங்கள்/தரைப்பாலங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சென்னையில் கீழ்வரும் இரயில்வே மேம்பாலம்/தரைப்பாலம் கட்டும் திட்டங்களை 2004–2005 ஆம் ஆண்டு இரயில்வே பணித் திட்டத்தில் சேர்க்க இரயில்வே துறையிடம் கோரப்பட்டு அத்துறையின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

1. கத்திவாக்கம்–காக்ரேன் பேசின் இரயில்வே சந்திக்கடவில் மேம்பாலம்

2. இரங்கராஜபுரம் இரயில்வே சந்திக்கடவில் மேம்பாலம்.

3. வில்லிவாக்கம் இரயில்வே சந்திக்கடவில் LC2 வாகன சுரங்கப்பாதை.

4. வில்லிவாக்கம் இரயில்வே சந்திக்கடவில் LC1 வாகன மேம்பாலம்.

5. மணியக்காரச் சத்திரத் தெருவில் (M.C. Road) இரயில்வே சந்திக்கடவில் வாகனச் சுரங்கப்பாதை மற்றும்

6. கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திக்கடவில் வாகன சுரங்கப் பாதை.

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேம்பாலம் என்பது, மேம்போக்குப் பாலமாக ஆகி அவசர கோலங்களில் தேவையற்ற இடங்களில் இலாப நோக்கத்திற்காக கடந்த காலங்களில் கட்டப்பட்ட நிலை மாறி இப்போது மக்கள் நல அரசான டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மக்களின் பயன்பாட்டுக்காக இரயில்வே கடவுப் பகுதிகளில் 3 மேம்பாலங்கள், 3 சுரங்கப் பாலங்கள்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த 6 பாலங்களுக்கும் ஆகின்ற செலவு எவ்வளவு? 2004–2005 ஆம் ஆண்டில் எவ்வளவு நிதி இந்தப் பாலங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது? இந்தப் பாலங்களைக் கட்டி முடிப்பதற்கு உண்டான ஆண்டுகள் எத்தனை என்று வரையறுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அனுமதி கோரப்பட்ட 6 பாலங்கள், மேலும் சேத்துப்பட்டு–பச்சையப்பன் கல்லூரி அருகில் ஹேரிங்டன் ரோடு சந்திக்கடவில் ஒரு சுரங்கப் பாதை ஆக இந்த 7 பாலங்களுக்கும் சேர்த்து ரூ.66 கோடியாக மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கிறது. அவற்றில் 7–வது பாலமாகக் கூறப்பட்ட சேத்துப்பட்டு–பச்சையப்பன் கல்லூரி அருகில் ஹேரிங்டன் ரோடு சந்திக்கடவில் சுரங்கப் பாதைக்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. மீதி இருக்கின்ற 6 பாலங்களுக்கு இரயில்வே துறையிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. அந்த அனுமதி கிடைத்தவுடன் அந்தப் பாலங்களுடைய பணி மேற்கொள்ளப்படும். ஆக, 7 பாலங்களுக்கும் சேர்த்து மொத்த மதிப்பீடு ரூ.66 கோடி ஆகும்.

முற்பகல் 11–20

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலங்களைக் கட்டுவதற்காக ரூ.66 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, 2004–2005 ஆம் ஆண்டில் இந்தப் பாலங்களைக் கட்டுவதற்கு ஒதுக்கியிருக்கிற நிதியினையும், ஒரு இலட்சத்திற்கும் அதிகமான வாகனங்கள் கடந்து செல்கிற இருப்புப்பாதைக் கடவுப் பாலங்களை கணக்கெடுத்து இருக்கிற தென்னக இரயில்வே துறை, இந்த 6 இருப்புப்பாதைக் கடவு பாலங்களுக்கும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான வாகனங்கள் செல்கிற பாலங்கள் என்று கணக்கெடுத்து, இதை 2000 ஆம் ஆண்டே திட்ட மதிப்பீட்டில் சேர்த்துள்ளதால், இந்தப் பணிகளை விரைவாகத் தொடங்குவதற்கு இரயில்வே துறையிடம் சென்னை மாநகராட்சி வற்புறுத்துமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2004 ஜூலை 29]

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரயில்வே துறையிடம் சென்னை மாநகராட்சி மூலமாக, கடந்த 3–6–2004 அன்றும், அதற்கு அடுத்தபடியாக 30–6–2004 அன்றும் கடிதம் மூலமாக அனுமதி கோரப்பட்டது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னை மாநகரில் போக்குவரத்து தடையின்றி செல்ல வேண்டுமென்ற காரணத்திற்காக மிக விரைவாக அனுமதி பெற்று உடனடியாக அந்தப் பணியைச் செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பித்ததன்பேரில் மிக வேகமாக அந்த அனுமதியைப் பெறுவதற்கு சென்னை மாநகராட்சியானது முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்@

பதினொன்றாவது பட்டியல்

1—

மயானச் சாலை செப்பனிடல்

வினா எண் 17899— திரு. லா. சந்தானம் : மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், குறவக்குடி மயானச் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை மேம்பாடு செய்ய தோராயமாக ரூ.6.00 இலட்சம் தேவைப்படும். மதுரை மாவட்டத்திற்கான பத்தாவது ஐந்தாண்டு பெருந்திட்டத்தில் (2002-2007) (Master Plan) இச்சாலைப் பணி இடம் பெற்றுள்ளது.

@இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.